ஒ.எஸ்.எண். 50/2017, PW-1, திருமதி. தவமணி, த/பெ.பாஸ்கர்

வ.வி.எண். /202 -ல்- ஏற்பட்ட உத்தரவின்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு கூடுதல் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 39 வயதாகிறது. நான் என்னுடைய அப்பா,அம்மாவிற்கு ஒரே பெண் என்றால் ஆமாம். வேறு வாரிசுகள் யாரும் என் பெற்றோருக்கு இல்லை. என் அப்பா மின்சார வாரியத்தில் வேலை பார்த்தார். என் அப்பா எப்போது வேலைக்கு சேர்ந்தார், எவ்வளவு காலம் வேலை பார்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடன் எனது அம்மா, எனது கணவர் மற்றும் எனது மூன்று குழந்தைகளுடன்தான் குடியிருந்து வருகின்றேன். நான் தற்போது குடியிருக்கும் வீடு என் அப்பா கட்டியது என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பிறகு எனது அம்மாவிற்கு குடும்ப ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனது கணவர் என் வீட்டோடுதான் இருக்கிறார். என் வீட்டில் இருக்கும் ஒரே ஆண் அவர்தான் என்றால் தற்போதைக்கு அவர்தான். என் அம்மாவிற்கு உதவியாக டைலர் வேலை பார்த்து சம்பாத்யம் செய்கின்றேன் என்றால் சரியல்ல. நான் டைலர் வேலை செய்யவில்லை. எனது அப்பா 2012ம் வருடம் இறந்துபோனார். எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் வருடம் ஞாபகம் இல்லை, 15 வருடங்கள் ஆகிவிட்டது. எனது திருமணத்தின்போது எனது பெரியப்பாவிற்கு நாங்கள் பத்திரிக்கை வைக்கவில்லை. எனது அப்பா இறப்பிற்கு என் பெரியப்பாவோ, அவரது குடும்பத்தினரோ வரவில்லை. நான் குடியிருக்கும் வீட்டில் நான்கு பக்கமும் வேலி உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பாவிற்கு குழந்தைகள் இருக்கிறார்கள். எனது பெரியப்பாவின் மகன்களோடு எனக்கு விபரம் தெரியும் வரை நான் விளையாடியிருக்கின்றேன். எனது பெரியப்பாவின் மகன் குமாரின் இறப்பிற்கு நான் போகவில்லை. எங்கள் வீட்டு விசேஷங்கள் எதற்கும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தார்கள் கலந்துகொள்வில்லை. என்னுடைய வாழ்நாள் முழுவதும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் பிரச்சினையாகத்தான் இருந்து வருகிறதா என்றால் இல்லை நடுவில்தான் பிரச்சினை வந்தது. எனது தாத்தா 1986ல் இறந்துபோனார். அந்த இறப்பு எனக்கு தெரியும். அந்த இறப்பிற்கு நானும் எனது அப்பாவும் போயிருந்தோம். எனது அப்பாதான் கொள்ளி வைத்தார். அவர் இறக்கும் வரை யாருடைய பராமரிப்பில் இருந்தார் என்றால் அவர் இஷ்டப்பட்ட வீட்டில் இருந்து கொள்வார். எனது பாட்டி 1987ல் இறந்துபோனார். எனது பாட்டியை இறக்கும்வரை அவரது மகள் சின்னாத்தாள்,

மாரியம்மாள் ஆகியோர்களின் பராமரிப்பில் இருந்துவந்தார். எனக்கு விவசாய வேலைகள் தெரியும். நான் 100 நாள் வேலைக்கு செல்வேன். நான் கூலி வேலைக்கு செல்வதில்லை. எனக்கு சொந்தமான வயலில் நான் வேலை செய்வேன். பொதுவாக எங்கள் பகுதியில் விவசாயம் குறைந்து வருகிறது என்றால் ஆமாம். பொதுவாக எங்கள் பகுதியில சவுக்கு மற்றும் ஆர்.எஸ்.பதி ஆகிய பணப்பயிர்களை விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் மோட்டார் வைத்திருப்பவர்கள் செய்து வருகிறார்கள். எங்களுக்கு மோட்டார் இல்லை. எங்களது நிலம் வானம் பார்த்த பூமியாகத்தான் இருந்து வருகிறது. எங்கள் நிலத்திற்கு தண்ணீர் இல்லாததால் ஆர்.எஸ்.பதி பயிரிட்டிருக்கின்றேன் என்றால் இல்லை, நிலம் தரிசாகத்தான் உள்ளது. எங்கள் நிலத்தில் ஆர்.எஸ்.பதி இருக்கிறது என்றாலும், அதை தற்போது அறுவடை செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு என் அப்பா பெயரில் உள்ளது. என் பெரியப்பா குடியிருக்கும் வீடு அவரது வீடு என்றால் எனக்கு தெரியாது. எனது மற்றொரு பெரியப்பாவின் வீடு அவர் பெயரில் உள்ளது என்றால் நான் வில்லங்கம் போட்டு பார்க்குமபோது அவர் பெயரில் இருப்பது தெரிய வந்தது. அவரவர் குடியிருக்கும் வீட்டிற்கு அவரவர்கள்தான் வரி செலுத்தி வருகிறோம். என் அப்பா பெயரில் உள்ள சொத்துக்களை என் அம்மா எனக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எங்களுக்கு அருகில் உள்ள ஆதனக்கோட்டை காவல் நிலையம் என்றால் சரிதான். ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் எனக்கும் எனது பெரியப்பா வீட்டிற்கும் பிரச்சினை நடந்து புகார் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். எனது குடும்பத்தாரும், எனது பெரியப்பா ரெங்கையாவின் குடும்பத்தாரும்தான் பெருங்களூரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது இன்னொரு பெரியப்பா பெரமையாவின் குடும்பத்தார். பெருங்களூரில் இல்லை. அவர்கள் புதுக்கோட்டையில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். பெருங்களூருக்கு ஏதேனும் விசேஷத்திற்கு வருவார்களா என்றால் ஊரில் உள்ள நபர்கள் விசேஷம் சொன்னால் வருவார்கள். எனது குடும்ப விசயத்திற்கு எனது பெரியப்பா பெரமையாவின் குடும்பத்தார் வந்தது இல்லை. எனது சொத்துக்களை ரெங்கையாவோ, பெரமையாவோ இடைஞ்சல் ஏதும் செய்யவில்லை என்றால் எங்களுக்கு உள்ள ஒரே சொத்து வீடு மட்டும்தான். எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் குடும்ப சொத்துக்கள் உண்டு. குடும்பச் சொத்துக்களில் விவசாயம் செய்கிறோமா என்றால் ஒரு காலத்தில் எல்லோரும் சேர்ந்து பார்த்தோம். தற்போது மழை இல்லாத காரணத்தால் விவசாயம் ஏதும் செய்வதில்லை. என்னுடைய சொத்துக்கள் தனியாக நிர்வகிக்கப்படுகிறது என்றாலும் அதில் நாங்கள் தனியாக விவசாயம் செய்து வருகின்றோம் என்றால் சரியல்ல. நானோ, எனது பெரியப்பா ரெங்கையா, மற்றொரு பெரியப்பா பெரமையா ஆகியோர்

சொத்துக்களை மாற்றிக்கொள்ளாமல் மூதாதையர் பெயரில் வைத்தே அனுபவித்து வருகின்றோம் என்றால் சரியல்ல. எனக்கு சொத்துக்கள் எப்பொழுது பிரிக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. எனது அப்பா, பெரியப்பா இருவர் ஆகியோர்கள் தனித்தனியாக சொத்துக்களை பிரித்து அவரவர் பாகத்தை தனித்தனியாக கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா பெரமையாவின் பெயரில் உள்ள சொத்துக்களை அவருடைய மனைவி மக்கள்தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் வைத்திருந்த சொத்துக்களை ஒத்திக்கு விட்டிருக்கிறார்களா அல்லது விற்றுள்ளார்களா என்ற விபரம் தெரியுமா என்றால் நான் வில்லங்கம் எடுத்து பார்த்தபோது சொத்துக்களை விற்ற விபரம் எனக்கு தெரியவந்தது. அவர்கள் விற்ற சொத்துக்களில் அவர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டதாகவும், அதை அவர்கள் விற்றதாகவும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா இறப்பதற்கு முன்பு 1985ல் எனது பெரியப்பாவிற்கு தானம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் படுத்தபடுக்கையாக இருந்தார். எனது அம்மா எனக்கு எழுதி கொடுத்த ஆவணங்களில் எனது கணவர் பாகத்திற்கு கிடைத்த சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பெரியப்பா பெரமையா இறப்பிற்கு பின்னர் அவருடைய மனைவி சில சொத்துக்களை தன்னுடைய கணவரின் பாகத்தில் கிடைத்த சொத்து என்று விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கு மின்சார வாரியத்தில் வேலை வாங்கி கொடுத்தது, படிக்க வைத்தது யார் என்று தெரியுமா என்றால் எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் படிப்பறிவு கிடையாது, எனது அப்பாவும் பெரியப்பாவும் தற்காலிகமாக குழி தோண்டும் வேலைக்கு சென்று பின்னர் பணி நிரந்தரமாக்கப்பட்டார். எனது அப்பாவிற்கு பல கட்டங்களாக பதவி உயர்வு கிடைத்த என்றால் இல்லை. எனது பெரியப்பா பதவி உயர்வு பெற்று சென்றார். என் அப்பா இறக்கும்போது லயன்மேனாக வேலை பார்த்தார். எனது பெரியப்பா ரெங்கையாதான் எனது அப்பாவையும் மற்றொரு பெரியப்பாவையும் படிக்க வைத்து வேலை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 1985ல் எனக்கு 6 வயது. எனக்கு 6 வயதாக இருக்கும்போதே சொத்துக்களில் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. 1985க்கு பிறகுதான் அவரவர்கள் பாகம் பொறுத்து பல்வேறு கட்டங்களில் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் வீடுகளை பிரித்து எந்த பாகமும் செய்துகொள்ளவில்லை. நான் குடியிருக்கும் வீடு, எனது பெரியப்பா குடியிருக்கும் வீடுகள் அனைத்தும் அவரவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் குடியிருப்பதால் அரசாங்கள் எங்களுக்கு பட்டா கொடுத்துவிட்டது. ஆனால் பாகம் பிரிக்கவில்லை. விவசாய

நிலங்கள் அனைத்தும் எங்களுடைய பாட்டனார் பெரிலேயே உள்ளது என்றால் சரியல்ல. எனது பெரியப்பா ரெங்கையா எனது தாத்தாவிற்கு அனுபவித்து வந்த சொத்துக்களையும் அவரே வைத்துக்கொண்டார் என்றால் பொதுக்குடும்ப சொத்தாகத்தான் உள்ளது. எனது தாத்தா தனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தனது மூத்த மகன் ரெங்கையாவிற்கு எழுதி இனாமாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கும், எங்களது பெரியப்பாவிற்கும் சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கும் பெரியப்பா குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ளதுபோல் சொத்துக்கள் எதுவும் கூட்டுகுடும்ப சொத்துக்கள் அல்ல என்றாலும், மேற்படி சொத்துக்கள் அனைத்து தனித்தனி பாகஸ்தர்கள் வைத்திருக்கும் சொத்து என்றால் சரியல்ல. அவர்கள் தங்கள் மூதாதையர் பெயரிலேயே சொத்துக்களை மாற்றாமல் வைத்திருப்பதை அனுகூலமாக வைத்துக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அடிப்படையாக வைத்துதான் என் தாயாரிடமிருந்து நான் செட்டில்மெண்ட் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நஞ்சை, புஞ்சை நிலங்கள் நான்தான் பராமரித்து வருகின்றேன் என்றாலும், அதற்கு வரி செலுத்தி வருகின்றேன் என்றாலும் சரியல்ல. எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்தில் ஆர்.எஸ்.பதி பயிரிட்டுள்ளதாக பசலி கணக்கு தாக்கல் செய்திருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் அப்படி எந்த ஆவணமும் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.